**தலைப்பு 244 – வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 244 – வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 28 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1,161.76 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,161.01 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 0.76 மில்லியன் அதாவது 0.07 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,157.09 | 1,156.56 | 0.53 | 0.04 |
| மூலதனம் | 4.67 | 4.45 | 0.23 | 4.86 |
| மொத்தம் | **1,161.76** | **1,161.01** | **0.76** | **0.07** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 24401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.50 | 2.15 | 1.20 | 1.86 | 12.00 | 7.95 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

02 செலவு விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் அந் நிதியேற்பாட்டை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 27 சதவீதம் மற்றும் 33 சதவீதமாக இருந்தது.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 அக்தோபர் 17 திகதிய 02/2014 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டும் பெப்ரவரி 26 திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு அறிக்கை அடங்கிய பயன்படுத்த முடியாத பண்டங்களில் அழிக்க வேண்டிய பண்டங்களை அழித்து முடிவாக்க வேண்டுமெனினும், அதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 25 திகதி வரை அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மெய்மையாய்தல் சபை அறிக்கையின் படி அவதானிக்கப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 757(2)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | 2010 அக்தோபர் 11 திகதிய மு.கிர.அ. 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 15 திகதிய மு.அ.01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 460 அமெ. டொலர்கள் மற்றும் ரூபா 28,713 | வெளிநாட்டு அரச / பங்களிப்பு நிறுவனங்களினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பிரயாணச் செலவு, தொலைபேசிக் கட்டணம் போன்ற இடைநேர்ச் செலவுகளை தீர்ப்பதற்காக ஏதேனும் பணத்தை செலுத்தாதவிடத்து மாத்திரம் செலுத்த வேண்டிய இடைநேர் படியினை அவ்வாறு வெளிநாட்டு அரசு / நிறுவனத்தின் மூலம் செலுத்தியிருந்த சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது திணைக்களத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு 05 சந்தர்ப்பங்களில் அ.டொலர்கள் 460 மற்றும் ரூபா 28,713 தொகை கொடுப்பனவு செய்திருந்தது. |
| (ஆ) | 2010 அக்தோபர் 11 திகதிய மு.கிர.அ 01/2010/01 இலக்கம் கொண்ட நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | -- | இஸ்லாமாபாத்தில் நடைபெற இருந்த பாகிஸ்தான் - இலங்கை Joint working group கலந்துரையாடலில் பங்குபற்று வதற்காக பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு இடைநேர் மற்றும் இணைந்த படியாக US$ 750 (ரூபா 99,951) தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் இரத்துச் செய்யப்பட்டமையால் இப் பணத்தை திணைக்களத்திற்கு செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்காமல் அந்த பெண் உத்தியோகத்தரின் வேறு ஒரு பிரயாணத்தின் போதும் வேறு ஒரு பெண் உத்தியோகத்தரின் பூடான் பிரயாணத்திற்காகவும் சமப்படுத்தப்பட்டதெனவும் மற்றும் மீதித் தொகை என US$ 126 (ரூபா 16,084) தொகையினை திருப்பிச் செலுத்தியிருந்தார். |

**3.4 செயலாற்றுகை**

2015 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 40 கருமங்கள் அடங்கியிருந்ததுடன் அவற்றில் 16 கருமங்கள் அதாவது 40 சதவீதம் தொடர்பாக செயற்படுவது ''நேரிட்டால் அல்லது விண்ணப்பித்தால்'' (if arisen or if requested) மாத்திரமே'' என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) பல வருட காலமாக திணைக்கள செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது தெரிவு செய்யப்பட்ட சில கருமங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன. திணைக்கள கருமங்களில் அடங்கியிருந்த திட்டங்கள் தயாரிக்கும் கருமங்கள், செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்துதல் நடைபெறுவதில்லை என அவதானிக்கப்பட்டன.

**(இ) சுங்க செயற்பாடுகளுக்குரிய மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தனிப்பட்ட சாராரினால் 2015 பெப்ரவரி 12 திகதி சுங்கப் பரிசோதனை தொடர்பாக மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 20 திகதி இது தொடர்பாக சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அவதானிப்பு வினவப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக தொடல் செயல்நடவடிக்கை எடுக்கப்படாதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஜனவரி 23 திகதி திணைக்களத்திற்கு செலாவணிக் கட்டுப்பாட்டு சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் இருந்து 2015 பெப்ரவரி 09 திகதிய கடிதத்தின் மூலம் மற்றும் 2015 திசெம்பர் 08 திகதிய நினைவூட்டல் கடிதத்தின் மூலம் அதனோடு தொடர்புடைய அவதானிப்புக்களை சமர்ப்பிக்கும் படி வினவியிருந்த போதிலும், கோவையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எதிர்காலத்தில் செலுத்தும் முறையின் கீழ் சுங்கக் கட்டணத்தை தீர்ப்பதற்கு பண்டங்களை விடுவிப்பது தொடர்பான அங்கீகாரம் வழங்கல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க நிறுவனங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்காக சுங்கவரி செலுத்துவதற்காக அச்சந்தர்ப்பத்தில் நிறுவனத்திற்கு வழங்கியிருந்த நிதியேற்பாடுகள் போதியளவினதாக காணப்படாவிடின் குறிப்பிட்ட பண்டங்களை தாமதமின்றி விடுவிப்பதற்காக அந்த பண்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய சுங்கவரியை ஆண்டு இறுதியில் மீதியாகவுள்ள நிதியேற்பாடுகளில் இருந்து செலுத்துவதற்கான இணக்கமொன்றின் மீது பண்டங்களை விடுவிப்பதற்காக திணைக்களத்தினால் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின்/ பொது நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் விதப்புரைகள்/ இணக்கங்கள்/ கட்டளைகளின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதனோடு தொடர்புடைய தீர்த்து வைத்தல்கள் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறாமை

தொடர்பாக அங்கீகாரம் வழங்கியிருந்த நிறுவனத்தினாலும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக அந்த நிலுவை வரித் தொகை ரூபா 19,497,552,935 தொகை ஆகியிருந்தது. இந்த நிலுவைத் தொகை தொடர்பாக 2015 ஆம் ஆண்டின் இறுதியில் மற்றும் 2016 ஆண்டின் போது நடைபெற்றிருந்த கடித பரிமாற்றங்களின் படி அவை அறவிடப்பட முடியாத நிலையினை அடைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ii) இது தொடர்பாக முறையான பதிவேடு ஒன்று திணைக்களத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. அந்த அங்கீகாரத்துடன் தொடர்புடைய பண்டங்களை விடுவிப்பது தொடர்பாக திணைக்களம் அறிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும், திணைக்களத்தினால் இதற்கான அங்கீகாரம் வழங்கும் போது, இதன் கீழ் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி விற்பனை செய்தல், வாடகைக்கு அல்லது குத்தகை அடிப்படையில் அல்லது வேறு ஏதும் விதத்தில் அகற்றல் மேற்ககொள்ள முடியாது என நிபந்தனையொன்று குறிப்பிட்ட கடிதங்களில் அடங்கியிருந்தன.

(iii) தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சில கோவைகளில் பரிசோதனை மேற்கொண்ட போது, அவ்வாறு நிலுவையாக உள்ள பணம் செலுத்த முடியாதவை என்ற காரணமாக குறிப்பிட்ட அமைச்சின் கீழ் செயற்படாமை, அமைச்சிலிருந்து விதப்புரைகள் வழங்கப்பட்டதற்கான காரணங்கள் உறுதிப்படுத்தப்படாமை, இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பான விபரங்கள்/ கோவைகளை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் வழங்கியிருந்த பாதீட்டு நிதியேற்பாடு போதியளவினதாக காணப்படாமை ஆகிய விடயங்கள் குறிப்பிட்ட நிறுவனங்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக திணைக்களம் அல்லது தேசிய பாதீட்டுத் திணைக்களம் அல்லது பொது நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல்**

2007 ஆண்டு முதல் 2015 நவம்பர் 20 திகதி வரை திணைக்களத்தினால் அவ்வப்போது வழங்கப்பட்ட சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு சலுகை நிபந்தனையின் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யும் திட்டமொன்று அமுல் நடத்தியிருந்தது. அதே போல், அரசாங்க சேவையில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்காகவும் வெளிநாட்டுத் தூதரகங்களில் சேவையாற்றி சேவைக்காலம் முடிவடைந்து மீண்டும் இலங்கைக்கு வரும் உத்தியோகத்தர்களுக்காகவும் மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் அது தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட தரவு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை. 165 ஆம் இலக்க வெளிநாட்டு விவகார அமைச்சுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2008 ஆண்டின் போது சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருந்த இலங்கை வான்படை உத்தியோகத்தர் ஒருவருக்கு உண்மையான நிலைமை வெளிப்படுத்தப்படாமையால் 2011 ஜூன் 07 திகதி மீண்டும் அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டிருந்தமையால் அரசுக்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ii) 2006 ஏப்ரல் 25 திகதி 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக சிரேஷ்ட நிலையில் 06 வருடங்கள் தொடர்ச்சியாக மாற்றும் சுறுசுறுப்பான சேவைக்காலமொன்றினை நிறைவேற்றிய உத்தியோகத்தர்களுக்கும், தென் மாகாண சபையின் பிரதாம செயலாளரினால் ஓய்வுபெற்ற கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த 42 உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு மேற்கூறிய உத்தியோகத்தர்களிடையே ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கியிருந்த அனுமதிப்பத்திரத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டிருந்த வாகனத்திற்காக வழங்கிருந்த வரிச் சலுகை ரூபா 4,165,329 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறிய அனைத்து விடயங்களின் மூலமும் அரசாங்கம் இழந்துள்ள வரியின் பெறுமதி பாரிய பெறுமதியினை பெற்றிருந்தது.

(iv) இதன் கீழ் காணப்பட்ட வரிச்சலுகை வழங்கப்படல் தொடர்பாக சுங்க கட்டளை (திருத்திய) சட்டத்தின் 19(அ)(1) மற்றும் 19(அ)(2) இன் படி நடவடிக்கை எடுத்தல் திணைக்களத்தில் செயற்பாடு ஒன்றாக இருந்த போதிலும், அது தொடர்பாக எதுவித தொடர் செயல்நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**(ஊ) சுங்க கட்டளைச் (திருத்திய) சட்டத்தின் 19(அ)(1) மற்றும் (2) பிரிவுகளின் கீழ் சுங்கத் தீர்வை அகற்றுதலைக் கூட்டிணைப்பு செய்தல்**

---

ஏதேனும் ஒரு நபரினால் ஏற்றுமதி செய்யப்பட்ட இல்லாவிடின் அவரின் பேருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் பண்டம் ஒன்று குறித்தொதுக்கியவைகளில் குறிப்பிடக் கூடிய நிபந்தனைகளின் கீழ் அதற்காக அறவிடப்பட வேண்டிய சுங்கத் தீர்வைகள் அனைத்திலும் அல்லது ஒரு பகுதியில் விடுவித்தல் மேற்கொள்ள இயலும் என சட்டத்தின் 19(அ)(2) பிரிவில் குறிப்பிட்டுள்ளது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அனைத்து குறித்தொதுக்கியவைகளும், வர்த்தமானியின் வெளியிடப்பட்ட பின்னர் கூடிய விரைவில் அதனை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் அக்குறித்தொதுக்கியவைகள் வர்த்தமானியில் பிரிசுரிக்கப்பட்ட பின்னர் 60 நாட்களுக்குள் பாராளுமன்றத்தினால் அக்குறித்தொதுக்கியவை பிரேரணை ஆமோதித்தலின் மூலம் பின் இணையாக்க முடியும். எனினும் அச் சந்தர்ப்பத்தில் விடுவிக்கப்பட்ட பண்டங்களுக்காக செலுத்த வேண்டிய சுங்கத் தீர்வை சட்டத்தின் 145 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அறவீடு செய்ய முடியும்.

(i) அதன் பிரகாரம் குறிப்பிட்ட விடயங்கள் வர்த்தக மற்றும் முதலீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதாக செயற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கோவையின் பிரகாரம் 2011 ஆகஸ்ட் மாதம் வரை தீர்வை சலுகை வழங்குதல் மாத்திரம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு குறிப்பிட்ட திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) இவ்வாறு வழங்கப்பட்ட வரிச் சலுகை ‘‘வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 60 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் பிரேரணை ஆமோதித்ததுடன் பின்னிணைப்பினால் விடுவிக்கப்பட்ட பண்டங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய சுங்கத் தீர்வை அப் பண்டங்களின் இறக்குமதியாளர்களினால் அல்லது பணத்தை பெறுவோரினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டும்’’ ஆகிய மேற்கூறிய தேவைக்கு இணங்கியிருத்தல் நடைபெற்றிருக்கவில்லை.

(எ) சார்க் அபிவிருத்தி நிதியத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் கண்காணித்தல் திணைக்களத்தின் கடமையொன்றாக இருந்தது. அதன் கீழ் நிதியத்தின் நிதிசார் உதவியின் கீழ் செயற்படும் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய நேரடி மேற்பார்வை ஒன்று மேற்கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதனோடு தொடர்புடைய செயற்திட்டம் முடிவடைந்திருந்த போதிலும், நிதியத்தில் இருந்து வினவியிருந்த செயலாற்றுகை அறிக்கை, செயல் முன்னேற்றம், நிதி மற்றும் சமூக மதிப்பீடு மற்றும் சுதந்திர கணக்காய்வு அறிக்கை என்பன சமர்ப்பித்திருக்கவில்லை. 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்ட விடயங்கள் தாமதமடைந்திருத்தல் செயற்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட அமெ.டொ. 27,335 தொகை பெறுமதியான ஆய்வு கையுறைத்தொக்கு விமான நிலையத்தில் இருந்து 2015 ஆகஸ்ட் 13 திகதி வரை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதற்காக தாமதக் கட்டணம் செலுத்த நேரிட்டமை ஆகிய காணரங்களினால் திணைக்களத்தில் கடமை நிறைவேற்றல் தொடர்பாக கணக்காய்வில் திருப்தி அடைய முடியாது.

### 3.5 சர்ச்சகைக்குரிய தன்மையிலான சிக்கல்கள்

சார்க் அபிவிருத்தி நிதியத்தின் ஆரம்ப மூலதனத்திற்காக இலங்கையின் பங்களிப்புத் தொகையாக 2010 ஆண்டு முதல் 6,432,000 அமெரிக்க டொலர்கள் வீதம் அதாவது ரூபா 32,160,000 தொகைக்கான ஐந்து தவணைப் பணங்கள் செலுத்த வேண்டியிருந்தன. 2014 ஆண்டு இறுதியவில் அவற்றில் 5 தவணைகளை் செலுத்தி முடிவாக்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 8,146,000 அமெரிக்க டொலர்களுக்காக 2015 இன் பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 1,083,500,000 இற்கான நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அவற்றில் முதலாவது பகுதியாக 2015 ஆகஸ்ட் 11 திகதி 4,073,000 தொகையான அமெரிக்க டொலர்கள் அதாவது இலங்கை ரூபா 544,763,750 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் இரண்டாவது பகுதி 2015 அக்தோபர் 05 திகதி 4,073,000 தொகை அமொரிக்க டொலர்கள் அதவாது ரூபா 575,352,387 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான 2015 ஆண்டின் போது நிதியேற்பாடுகள் மேற்கொண்டிருந்த போதிலும் குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்ட தவைணப் பணத்தை செலுத்தாமல் தாமதப்படுத்தியமையால் செலாவணி விகிதாசாரத்தில் வித்தியாசத்தின் மீது ரூபா 36,616,137 தொகை மிகையாகச் செலுத்துவதற்கு திணைக்களத்திற்கு நேரிட்டிருந்தது.

### 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவி யணியினர் | உள்ளபடியான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணி க்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 12 | 02 |
| (ii) | இரண்டாம் நிலை | 30 | 29 | 01 |
| (iii) | ஆரம்ப நிலை | 13 | 13 | - |
| | **மொத்தம்** | **57** | **54** | **03** |